**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**EA.No. 228/2019 in E.P. No. 38/2010**

திரு.சந்திரசேகர் (P.W.–1) **21.08.2023.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். E.P. No. 38/2010 ல் நான் மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். இந்த வழக்குச் சொத்து பொறுத்து தற்போதும் சென்னை உயர் நீதிமன்றத்தில் AS.No. 191/2007 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கை நான் உயர்நீதிமன்றத்தில் நடத்தி வருகிறேன். மேற்படி உயர்நீதிமன்றத்தில் உள்ள AS.No. 191/2007 என்ற வழக்கு முடிவுக்கு வந்தால் தான் சொத்தில் யாருக்கு உரிமை உள்ளது என்பது தெரியவரும் என்றால் சரிதான். இந்த சூழ்நிலையில் இம்மனுவில் நான் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை பொறுத்து குழந்தையம்மாள் என்பவருக்கு தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான்.

2. அவரிடம் இருந்து நான் Madeover வாங்கி வழக்கை தற்போது நடத்தி வருகிறேன். நான் Madeover வாங்குவதற்கு முன்பாகவே 1ம் மனுதாரர் மோகன் என்பவர் நீதிமன்றத்தில் பற்றுகை உத்தரவு வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் Madeover வாங்குவதற்கு முன்பாகவே குழந்தையம்மாளுக்கு ஆதரவாக தாவாச்சொத்தை பொறுத்து பற்றுகை உத்தரவு பெறப்பட்டுள்ளது. ஆகவே நான் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**(3 முதல் 5 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– பா.செல்லதுரை.,
முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.